
# 30 Years

# Calvary Full Gospel Church







1984

உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர்,
அவர் அப்படியே செய்வார்.
1 தெசலோ. 5:24

## பொருளடக்கம்


1. தலைமைப் போதகரின் செய்தி
2. தரிசனத்தை நோக்கி
3. முன்னோடிகள்
4. நிறைவேற்றுப் போதகரின் செய்தி
5. பிரதேச போதகர்களின் செய்திகள்
6. திரும்பிப் பார்க்கிறோம்
7. வாழ்த்துச் செய்திகள்
8. சமூகப்பணி செய்திகள்
9. தரிசனம்
10. இன்றைய பொறுப்பாளர்கள்
11. சவால்


30


## எமது 30வது ஆண்டு நன்றி நவிலும் ஆராதனைக்கு உங்களை அன்போடு அழைக்கின்றோம்

1 தெசலோனிக்கேயர் 5:24 இன் வசனத்தில் "உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர்". என்று ஆண்டவராகிய இயேசு சொன்னது போல கடந்த 30 ஆண்டுகளாக கர்த்தர் எமக்கு உண்மையுள்ளவராக இருக்கின்றார். நாம் கடந்து வந்த பாதை மிகவும் பயங்கரமானதும்,கரடுமுரடுமானது. மரணத்துக்கும் எமக்கும் இருந்த இடைவெளி சிறியதே. அகதியாக யாழ்ப்பாணத்திற்கு வந்த போது நான் உங்களை கொல்வதற்கு அல்ல என் இராஜ்ஜியத்தை கட்டுவதற்கே கொண்டு வந்தேன் என்று கர்த்தர் சொன்னதையே இன்றைய நாளில் நினைவு கூருகின்றேன். கர்த்தர் ஒருவருக்கே மகிமை உண்டாவதாக. எனக்கு முன்பாக சென்று வசனத்தை விதைத்த முன்னோடிகளுக்காகவும் தண்ணீர் பாய்ச்சினவர் களுக்காகவும் எனது மரியாதையை செலுத்துகின்றேன். (1கொரி.3:7) என்ற வசனத்தின்படி கர்த்தரே விளையச்செய்தார்.

### சபை ஸ்தாபனம்

ஏலிம் என்ற பெயரில் சபை ஒன்றுகூடல் நடந்து வந்தாலும் ஏலிம் சிறுவர் இல்லத்தில் உள்ளவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட ஆராதனைக்கு அயலில் உள்ளவர்களும் வந்து கலந்துகொண்டனர். அவர்களில் போதகர்களான எரிக் நத்தானியேல், குணச்செல்வம், ஜோர்ஜ் அரியநாயகம் போன்ற பல தேவ ஊழியர்கள் சகோதரி லாசன் அவர்களுக்கு உதவி செய்தார்கள். பின்பு

Senior Pastor
**L.J. Mathews**



சகோதரன் டார்லிங்சன் அவர்கள் இணைந்து கொண்டு ஊழியம் செய்து வந்தார். அதன் பின்பு போதகர் ஜோசப் அவர்களும் இணைந்து கொண்டு ஏலிம் ஆலயம் என்ற பெயரில் ஊழியங்களை செய்து வந்தார்கள். எமது ஊழியத்தின் அஸ்திபார பணிக்காக பாடுபட்ட அனைவருக்கும் எமது நன்றிகளை கூறிக்கொள்கின்றோம்.

1984ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18ம் திகதி அதிக ஜெபத்துடன் கல்வாரி தேவாலயம் என்ற பெயரில் இச் சபையனது போதகர் பெக்லீட் (சுவீடன்) அவருடைய பிரதிஷ்டை ஜெபத்துடன் ஒழுங்குபடுத்தப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது. காலஞ்சென்ற போதகர் G.S.A ஜோசப் அவர்கள் போதகராக நியமிக்கப்பட்டார்.

லெஸ்லி மத்தியூஸ் ஆகிய நான் அன்றைய நாளில் போதகராக திருநிலைப்படுத்தப்பட்டேன். சகோ.புஷ்பராஜா அவர்கள் மூப்பராகவும் என்னை உதவிப்போதகராகவும் நியமித்தார்கள். சகோ.ஜோ.அகஸ்ரின் சகோ.கிறேஸ் ஜோசப் டீக்கன்களாக நியமிக்கப்பட்டார்கள். மிஷனரி அனா லாசன் அவர்கள் சபையின் போஷகராக இருந்தார். சபையை ஒழுங்குபடுத்தவும் ஊழிய நியமனங்களுக்காகவும் 12.01.1984 ஆண்டு முதல் செயல் கூட்டம் மிஷனரி அனா லாசன் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது. முதல் செயல் கூட்டத்தில் போதகர். ஜோசப் உடன் நானும் கலந்துகொண்டு ஜெபத்தோடு தீர்மானங்கள் எடுத்தோம். புதிதாக கட்டப்பட்ட தற்காலிகமான ஆலய மண்டபத்தை 18.02.1984 அன்று பிரதிஷ்டை செய்தோம். அதுவே சபையின் முதல் ஆண்டாக தீர்மானிக்கப்பட்டது. அதன் பின்பு வருடந்தோறும் வருடாந்த சபை அங்கத்தவர் கூட்டமும் வருடாந்த நிறைவு ஆராதனையும் நடைபெற்று வருகின்றது.

கொழும்பில் சௌகரியமான சபைகள் இருந்தும் மிஷனரி அனா லாசன் அவர்கள் வட பகுதிக்கு வந்து சிறுவர்களின் வாழ்வுக்கு விதைத்த விதையானது 1984 இல் சபையாக பரிநாமம் பெற்றது. ஒரு கல்லில் இரு மாங்காய் என்பது போல் ஏலிம் சிறுவர் இல்லமும் இந்த சபையும் ஸ்தாபிக்கப்பட்டன. அனா லாசன் அவருடைய வாழ்க்கையானது கர்த்தர் வடபகுதிக்கு கொடுத்த கொடையே. அவருக்காக கர்த்தரை துதிக்கின்றோம். மற்றும் சகோதரி அனிற்றாவுக்காகவும், அனா ரிலீவ் குழுவுக்காகவும் கர்த்தரை துதிக்கின்றோம்.

1984ம் ஆண்டு சபை ஒழுங்குபடுத்தப்பட்டு ஸ்தாபிக்கப்பட்ட அன்று காலஞ்சென்ற போதகர் G.S.A .ஜோசப் அவர்கள் ஊழியப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டு தேவனுடைய வார்த்தைக்கு ஏற்றபடி சபையை நடத்திக்கொண்டு வந்தார். தேவனுடைய வார்த்தையால் சபைக்கு நல்ல அஸ்திபாரத்தை அவர் போட்டார். 1989ம் ஆண்டு அவர் வியாதிப்பட்ட போது இந்த ஊழியத்தின் பொறுப்புக்களை நான் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. அன்றைக்கு இருந்த நிர்வாக குழுவும் சபை மக்களும் என்னிடம் ஒப்படைத்த இந்த சபையை தேவனுடைய பெலத்தோடும் வழிநடத்துதலோடும் அனேக தேவ ஊழியர்களின் ஆலோசனையோடும் கர்த்தர் எனக்கு தந்த நல்ல தேவ ஊழியர்கள் என்னுடன் சேர்ந்து நின்றபடியாலும் என் மனைவியின் ஜெபமும் கடின உழைப்பாலும் தரிசனத்தை நோக்கி சபையை வழிநடத்திக் கொண்டு வருகின்றேன்.

சிறிய கடுகு விதையாக விதைக்கப்பட்ட இந்த சபை இன்று 26 கிளைச் சபைகளாக கிளை பரப்பி வியாபித்து இருப்பது கர்த்தருடைய செயல் என்பதற்கு அடையாளமே. நாம் 10வது ஆண்டை கொண்டாடும்போது எமக்கு விரோதமாக அன்னிய ஜனங்களினால் போஸ்டர்கள் ஒட்டப்பட்டது. ஊழிய ஆரம்ப காலத்தில் என்னை சுட்டு கம்பத்தில் மாட்டுவேன் என்று பயமுறுத்தல் விடுத்தார்கள். அவ்வாறு கூறியவர்கள் இன்று யாழ்ப்பாணத்தில் இல்லை. ஆனால் கர்த்தர் தனது சபையை கட்டிக்கொண்டு இருக்கின்றார். கொழும்பில் 8 வருடங்கள் போதகர் திஸ்ஸ வீரசிங்க அவர்களிடம் கற்றுக்கொண்ட பாடங்கள் ஆலோசனைகள் அனைத்தும் யாழ்ப்பாணத்தில் பாடுகள் எதிர்ப்புக்கள் மத்தியிலும் அழைக்கப்பட்ட இடத்தில் மக்களோடு இருந்து ஊழியம் செய்வதற்கு உதவியாக இருந்தது.

## சீயோனோடு இணைப்பு

ஊழியத்தின் ஆரம்ப நாடகளில் 1984ம் ஆண்டு மிஷனரி அனா லாசன் அவர்களின் ஆலோசனைப்படி சீயோன் தேவாலயத்தோடு இணைந்து ஊழியம் செய்தோம். அந்நாட்களில் போதகர்.ஜொஷாயா பிலிப் அவர்களின் வழிநடத்துதல் சபையின் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்துவதற்கு உதவியாக இருந்தது. இலங்கை சுயாதீன சபை ஒன்றியத்திற்கு எங்களை சிபாரிசு செய்த போதகர். ஜொஷாயா அவர்களுக்கும் எமது நன்றிகள்.

## இலங்கை சுயாதீன திருச்சபைகளின் ஐக்கியத்துடன் இணைப்பு

1984ம் ஆண்டு எங்களை இலங்கை சுயாதீன திருச்சபைகளின் ஐக்கியத்துடன் இணைத்து கொண்டு எங்கள் இலக்கை நோக்கி நகர்வதற்கு நல்ல ஆலோசனை தந்து பாதுகாத்து எங்களுடைய போராட்ட நேரங்களிலும் எங்களுக்கு வந்த துன்பங்களிலும் எங்களுடைய கரங்களைத் திடப்படுத்தின இலங்கை சுயாதீன திருச்சபைகள் ஒன்றியத்திற்கும் அதன் தற்போதைய தலைவர் போதகர். நித்தியானந்தன் அவர்களுக்கும் செயற்குழுவுக்கும் கடந்த காலங்களில் கடமை யாற்றிய தலைவர்களுக்கும் எமது நன்றிகள்.

## தரிசனத்தை சுமப்பவர்கள்

ஊழிய தரிசனத்தோடு ஒத்துப்போகாதவர்களை கர்த்தர் வெளியே அனுப்புவது எல்லா சபைகளிலும் நடக்கிறது. இன்றுவரை என் கரங்களை திடப்படுத்தி என்னோடு சபை ஊழிய பாரத்தை சுமக்கின்ற எனது மூப்பர்களுக்கு, ஊழியர்களுக்கு எனது நன்றிகள்.

"இன்பத்திலும் துன்பத்திலும் சுகத்திலும் மரணம் நம்மை பிரிக்கும் வரை" என்று என்னோடு ஊழிய உடனபடிக்கை செய்து கொண்டு வெற்றிகளிலும் சோதனைகளிலும் போராட்டங்களிலும் கண்ணீரிலும் பற்றாக்குறைகளிலும் என்னோடு தோழோடு தோழாக நின்ற எனது அன்புக்குரிய மனைவி, ஊழியர்கள், விசுவாசிகளுக்கு நன்றி சொல்ல எனக்கு வார்த்தைகள் இல்லை. குறிப்பாக பிரதேச போதகர்களாக பொறுப்புடன் பணி புரியும் போதகர்களான கனகராஜா, ஜெனோ, ஆமோஸ், பத்மசிறி, பிரேம்குமார், டிலோன் மற்றும் அவர்களோடு இணைந்து பணிபுரியும் ஊழியர்களுக்கு எனது நன்றிகள். வாலிபர், சிறுவர், மாதர், ஜெபகோபுர வீரர்கள், உதவியாளர்கள் அனைவருக்கும் எனது இதய நன்றி பல.

நான் இல்லாத வேளைகளில் ஊழிய பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டு பொறுப்புடன் சபையை நடத்துகின்ற என் ஆவிக்குரிய மகன் போதகர்.வீ.கனகராஜாவுக்காக தேவனை துதிக்கின்றேன்.இவர்களை எல்லாம் எமக்குப் பிள்ளைகளாக தந்த தேவனுக்கு ஸ்தோத்திரம்.

ஜெபத்தில் என்னை தாங்கினதுமன்றி ஆலயத்திற்காக காணி வாங்குதல், நிதி சேகரித்தல் இப்பொழுது நீங்கள் இருக்கின்ற இந்த ஆலயத்தை வடிவமைத்து கட்டினது போன்ற பல ஆபத்தான தீர்மானங்களை எடுத்ததுமன்றி காலஞ்சென்ற மிஷனரி அனா லாசன் அவர்களின் மனப்பாரமாயிருந்த சமூகப்பணியையும் முன்னெடுத்து நடத்துகின்ற என் மனைவிக்காக என் தேவனை துதிக்கின்றேன்.யோனாவை நினிவேக்கு கொண்டு வந்தது ஒரு மீன். அது போல் என்னை இந்த மகத்தான ஊழியத்தை செய்யும்படி வழி நடத்தினது எனது மனைவியே.

எமது ஊழியத்தை ஜெபத்திலும் பொருளாதார உதவியினாலும் தாங்கி வருகின்ற உள்ளூர் மற்றும் வெளிநாடுகளில் வாழ்கின்ற நலன்விரும்பிகளுக்கு எமது நன்றிகள். எங்கள் வெற்றியில் உங்களுக்கும் பங்கு உண்டு. இந்த ஊழியத்தின் 30வது ஆண்டில் உபாகமம்.1:6 வசனத்தில் கர்த்தர் மோசேக்கு சொன்னதை எங்களுக்கும் சொல்கிறார். "போங்கள் சுதந்தரியுங்கள்" என்று கர்த்தர் சொல்வதை கேட்டு நாம் இருதயத்தாலும் ஒன்று சேர்ந்து இலக்கை நோக்கி தொடருகிறோம்.

எங்களை அழைத்தவர் உண்மையுள்ளவராயிருக்கின்றார். நாம் செல்ல வேண்டிய தூரம் வெகு தூரம். அவருடைய வருகை சமீபமாயிருக்கின்றது. இனி காலம் செல்லாது. வேகத்தோடும் விவேகத்தோடும் செயல்படுவோம். நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை உன்னை கைவிடுவதுமில்லை என்று வாக்குரைத்த தேவன் நம்மோடு இருக்கின்றார்.

"உலக முடிவுபரியந்தம்! நான் உங்களுடனே கூட இருக்கின்றேன்." (மத்தேயு.28:20) என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கொடுத்த வாக்குத்தத்தத்தை பிடித்துக்கொள்வோம். "மகிமை கர்த்தராகிய இயேசு ஒருவருக்கே"

## கல்வாரியின் தரிசனம்

இரட்சிக்கப்படுகிற ஒவ்வொருவரையும் பூரணராக
கிறிஸ்துவுக்கு முன்பாக நிறுத்துதல்.

## பணியைப் பற்றிய வாக்கியம்

கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்தல்,
கிறிஸ்துவின் வருகைக்காக ஆயத்தப்படுத்தல்.

## தரிசன திட்டம்

நமஸ்காரம், நல்லுறவு, நற்செய்திப்பணி ஆகிய மூன்று பக்க அழைப்பை உள்ளடக்கிய திட்டம் இது. மேல்நோக்கிய அழைப்பாகிய நமஸ்காரத்தின் (யோவான்.4:23, 24) மூலம் கர்த்தரோடு நல்ல உறவை ஏற்படுத்தி, உள்நோக்கிய அழைப்பாகிய நல்லுறவை (எபேசியர்.2:22) மக்களில் ஐக்கியத்தின் மூலம் ஒன்றுபடுத்தி, அந்த ஐக்கியத்தை வெளி நோக்கிய அழைப்பாகிய நற்செய்திப்பணியில் (மத்தேயு.28:18-20) ஈடுபடுத்துதலே கல்வாரியின் தரிசன திட்டமாகும்.

**CALVARY FULL GOSPEL CHURCH. KOKUVIL. SRI LANKA.**



Missionary
Hanna Larsson

## முன்னோடிகளுக்கு மரியாதை


சுவீடன் நாட்டைச் சேர்ந்த மிஷனரி அனா லாசன் அவர்கள், சொகுசான கொழும்பு வாழ்க்கையை விட்டு இலங்கையின் கடின பிரதேசமாகிய யாழ்ப்பாணத் திற்கு 1970ம் ஆண்டில் வந்து சிறுவர்களுக்காக எதையும் செய்ய வேண்டும் என்று பல தியாகங்களின் பலனாக ஏலிம் சிறுவர் இல்லம் ஸ்தாபிக்கப்பட்டது. பின்பு ஆத்தும பாரம் அவர்களை நெருக்கின படியால் பாஷை தெரியாமலே தனது பாசத்தினால் ஆத்தும ஆதாயம் செய்தார். அவருடைய இதயத்தின் கருவறைகளில் பிறந்தது தான் ஏலிம் ஆலயம். அவர்களோடு சேர்ந்து அந்த கருவை பலர் சுமந்தார்கள். அவர்களில் சகோ.டார்லிங்ஷன், போதகர்.குணச்செல்வம், ஆனந் தன், எறிக் நத்தானியேல், அகஸ்ரின், ஜோசப், சகோ.கிறிஸ்ரோ அருளானந்தம் போன்றவர்கள் முக்கிய மானவர்கள். ஆனால் போதகர்.G.S.Aஜோசப் அவர்கள் நிரந்தரமாக பணி செய்வற்கு தேவ சித்தம் அறிந்து இணைந்து கொண்டார்கள். அந்த கருவானது 1984ம் ஆண்டு கல்வாரி தேவாலயம் என்ற பெயரில் குழந்தை யாக பிறந்தது. இந்தக் குழந்தைக்குரிய கர்ப்பத்தை சுமந்த அனைவருக்கும் எமது மரியாதையை செலுத்து வதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

Pastor
G.S.A Joseph



## நிறைவேற்றுப் போதகரின் செய்தி

Executive Pastor
**V. Kanagarajah**



"இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்" என பவுல் விசுவாசத்துடன் கூறுகின்றான். சூழ்நிலைகள் மாறலாம். காலங்கள், வருடங்கள் கடந்தோடிப்போகலாம், ஆனாலும் நம்முடைய கர்த்தரோ மாறாதவர். கடந்த 30 ஆண்டுகளை கர்த்தரின் கிருபையினால் கல்வாரிபூரண சுவிசேஷ தேவாலயம் கடந்து வர கர்த்தராகிய இயேசுவே கிருபை புரிந்துள்ளார். இலங்கையில் மிஷனரி அனா லார்சன் அவர்கள் விதைத்த விதைகளாகிய "ஏலிம்" சிறுவர் இல்லம் "கல்வாரிபூரண சுவிசேஷ தேவாலயம் கிளைவிட்டு பெரியதோர் விருட்சமாக வளர்ந்துள்ளன. இலங்கையில் கிறிஸ்துவின் சபைகள் பலவிதமான பாடுகள் நெருக்கங்கள், எதிர்ப்புக்கள், பயமுறுத்தல், தாக்குதல்கள் அதிகரித்து செல்லும் காலகட்டத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இதன் மத்தியிலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து "பாதாளத்தின் வாசல்கள் சபையை மேற்கொள்வதில்லை என்ற வேதாகம சத்தியத்தை பற்றிக்கொள்வோம். கர்த்தருக்குள் நித்திரை அடைந்த இச்சபையின் முதல் போதகர் ஜீ.எஸ். ஜோசப் அவர்களை நினைவு கூர்ந்து அவர் பணிக்கு நன்றி கூறுகிறோம். தேவன் கொடுத்த தரிசனத்தை சுமந்து பல ஆண்டுகளாய் பணி புரியும் தலைமைப் போதகர் எல். ஜே. மத்தியூஸ், சாந்தி மத்தியூஸ் அவர்களுக்கும் நன்றி கூறுகின்றோம். யுத்தங்கள், இடம்பெயர்வுகள் வேதனைகளின் வழியாக இச்சபையானது கடந்துவந்தவேளையிலும் தேவனின் வழிநடத்துதல், அர்ப்பணிப்பு நிறைந்த ஊழியர்களின் பிரயாசங்கள், சேவைகள் முப்பது வருடங்களைக் கடந்துவர உதவின. தலைமைப் போதகரின் தரிசனத்தோடு இணைந்து செல்லக்கூடிய தலைவர்கள் இருந்தமையே முக்கிய காரணமாக இருப்பதை யாவரும் மறுக்கமுடியாது. 1995இல் இடம்பெற்ற இடம்பெயர்வின் பின் சபை ஊழியமானது வளர்ச்சியடைந்து விரிவாகியுள்ளது. சுவிஷேச ஊழியம், வாலிப ஊழியம், மாதர் ஊழியம், சிறுவர் ஊழியம் வீட்டுக் கூட்டங்கள், ஜெப

ஊழியங்கள், தலைமைத்துவப் பயிற்சிகள், கிளை சபைகள் ஸ்தாபிப்பு மற்றும் சமூக மேம்பாட்டிற்கான கல்வித் திட்டம், மருத்துவச் சிகிச்சை சிறுவர் போஷாக்குத் திட்டம், சுய தொழில் ஊக்குவிப்புத் திட்டம், கிருபை நிதி திட்டம், அனர்த்த நிவாரணப் பணித் திட்டங்கள் இவ்விதமாய் பல ஊழியங்கள் விரிவுபடுத்தப்பட்டு செய்யப்பட்டுவருகின்றன. இந்த 30ம் ஆண்டு சிறப்பு மலரினை தொகுத்து வழங்க உதவிய கர்த்தர் ஒருவருக்கே மகிமை செலுத்துகிறேன்.

## கொக்குவில் பிராந்திய ஊழியர்கள் ஊழியங்கள்

- **ஊழியர்கள்:**

  எல். ஜெ. மத்தியூஸ்
  வீ. கனகராஜா
  சி. பூலோகசிங்கம்
  தி. பார்த்தீபன்

சகோதரர் எஸ். கஜேந்திரன் (விக்ரம்)
சகோதரர் ஜி. பிரபாகரன்
சகோதரர் கு. குணரட்ணம் (றெஜி)
சகோதரர் யாக்கோபு குணரட்ணம்

- **உதவி ஊழியர்கள்:**

  சகோதரர் சீ. கோபாலசிங்கம்
  சகோதரர் செ. சுரேஸ்
  சகோதரர் அ. சிவகுமார்
  சகோதரர் சி பாலதாஸ்
  சகோதரர் த. சுயந்தகுமார்

- **கிளை சபைகளும் பொறுப்பாளர்களும்**

| | |
|---|---|
| கொட்டடி: | Bro. கஜேந்திரன், Pas. பார்த்தீபன் |
| திருநெல்வேலி: | Bro. பிரபாகரன் |
| சுதுமலை: | Bro. றெஜிகுணரட்ணம், |
| | Bro. கோபாலசிங்கம் |
| இருபாலை: | Bro. பிரபாகரன் |
| மணியந்தோட்டம்: | Pas. பூலோகசிங்கம் |

- **ஓய்வு நாள் பாடசாலையும் ஆசிரியரும்**

  ஆசிரியர்: 35
  பிள்ளைகள்: 2000

- **வீட்டுக் கூட்டங்கள்** – 14
- **வாலிப ஊழியம்** – சகோ. கஜேந்திரன் (விக்ரம்)
- **விசுவாசிகள், அங்கத்தவர்கள், சிறுவர்கள் எண்ணிக்கை** 2600

## மானிப்பாய் பிராந்தியத்திலிருந்து போதகர். ஜெனோ

Pastor
**S. Jeno**

யாழ்ப்பாணம், கல்வாரிபூரண சுவிசேஷ தேவாலயம் 30 ஆண்டை நிறைவு செய்வதையிட்டு மானிப்பாய் பிராந்தியத்திலிருந்து நானும், எனது சபை மக்களும், ஊழியர்களும் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின் றோம்.

கொக்குவிலில் விதைக்கப்பட்ட கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபையின் விதையானது முளைத்து பெருவிருட்சமாகி கனிகொடுத்ததின் விளைவே மானிப்பாய் திருச்சபையாகும். அவ்வகையில் எமது மானிப்பாய் திருச் சபையானது 1987ம் ஆண்டு இந்திய இராணுவப் பிரச்சினையின் காலத்தில் ஏலீம் சிறுவர் இல்லத்திலுள்ள பிள்ளைகளுக்காக ஆராதனை ஆரம்பிக்கப்பட்டு, இவ் வாராதனை ஸ்தலமானது ஏலீம் வளாகத்திலே நடைபெற்று, 1998 ஆண்டு விசுவாசிகளின் தொகை பெருக ஆரம்பிக்கவே நிரந்தர காணி ஒன்றைக் கொள் வனவுசெய்து புதிய ஆலயத்தை நிர்மாணித்து 2001ம் ஆண்டு தற்போது ஆராதித்துவரும் இடத்திற்கு இடமாற்றம் செய்தோம்.

இத்தகைய ஆரம்பமும், அதன் வளர்சியுமே இன்று மானிப்பாய் திருச்சபையானது தன்னகத்தே சங்கானை, சண்டிலிப்பாய், கல்வந்தாழ்வு, மருதபுரம் ஆகிய இடங்களில் கிளைசபைகளையும் கொண்டமைந்து காணப்படு வதுடன் 7முழுநேர ஊழியர்களுடனும் 40 துணை ஊழியர்களுடனும் 1120




ஓய்வுநாட் பாடசாலைப் பிள்ளைகளுடனும், ஆண், பெண் உட்பட840 விசுவாசிகளையும் கொண்டமைந்து காணப்படுகின்றது என்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைவதுடன், இத்தகைய வளர்ச்சிக்கு தேவன் உபயோகித்த கருவிகளாக எமது முன்னோடிகளான "Aunty Hannah, போதகர். ஜோசப், உடன் ஊழியர்கள், எமது தலைமைப் போதகர் எல்.ஜே.மத்தியூஸ் மற்றும் அவரது மனைவி சாந்தி மத்தியூஸ்" அவர்களுக்கும் நன்றி கூறுகின்றோம். எல்லாவற்றுக்கும் மேலாக அப்.1:8 இன்படி பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்தலும், கிறிஸ்துவின் செயலுமே காரணம் என்பதை மறக்கவோ மறுக்கவோ முடியாது. எனவே 30வது ஆண்டை கடந்துவர கிருபைசெய்த தேவன் ஒருவருக்கே மகிமையுண்டாவதாக!

## அளவெட்டி பிராந்தியத்திலிருந்து போதகர், ஆமோஸ்
## தேவனுக்கே மகிமை

30 ஆண்டுகள் கடந்து வந்த கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயத்தை கிளை சபையாகிய அளவெட்டி திருச்சபை போதகர்கள், முழுநேர ஊழியர்கள், சபை மக்கள், யாவரும் வாழ்த்துகின்றோம். கொக்குவிலில் ஸ்தாபிக்கப்பட்ட கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபை வளர்ச்சியடைந்து பெருகியதின் விளைவே அளவெட்டி திருச்சபை ஆகும்.

அளவெட்டி மக்கள் யுத்தத்தினிமித்தம் 1990ம் ஆண்டு இடம்பெயர்ந்து மானிப்பாய், சாவகச்சேரி முகாம்களில் வசித்து வந்த வேளையில் ஒரு சிலர் ஜெபக்கூட்டங்களில் கலந்து கொண்டனர். இடம்பெயர்ந்த அளவெட்டி மக்கள் மீள்குடியேறும் வேளையில் இவர்களை தலைமை ஆலயத்தில் இருந்து 14 பேர் கொண்ட ஒரு குழு இவர்களைச் சந்தித்தோம். பின்னர் தேவனின் சித்தத்தின் படியும் சபை போதகர்களின் அனுமதியுடனும் ஆமோஸ் ஆகிய நான் குடும்பத்து டன் அளவெட்டி பிரதேசத்திற்கு சென்று 1997ம் ஆண்டு 2ம் மாதம் கர்த்தருடைய ஊழியத்தை ஆரம்பித்தேன். மூப்பர் கனகசபையும் எம்முடன் இணைந்து தேவ கிருபையினால் தொடர்ந்தும் இந்த ஊழியத்தை செய்து வருகின்றார். இவ்வூழி யத்தை கர்த்தர் நாளுக்கு நாள் ஆசீர்வதித்து இந்நாள்வரை வழிநடத்தி வருகின்றார். அளவெட்டி திருச்சபையில் 5 முழு நேர ஊழியர்கள் ஊழியம் செய்து வருகின்றனர். மூப்பர்.கனகசபை, போதகர்.அன்ரனி ஆமோஸ், போதகர்.ஜோன் சன், போதகர்.லோகர், போதகர்.சஞ்சீவன் ஆகியோரும் பகுதி நேரமாக 5 பேர் தேவனுடைய கனமான இந்த ஊழியத்தை செய்து வருகின்றனர். அளவெட்டி

Pastor
**S. Amos**



திருச்சபையின் கீழ் 6 கிளை சபைகள் உள்ளன. அளவெட்டி, கல்லாரையில் ஞாயிறு காலை ஆராதனை நடைபெறுகின்றது. அளவெட்டியில் 200 விசுவாசிகளும் கல்லாரையில் 50 விசுவாசிகளும் கலந்து கொள்கின்றனர். ஞாயிறு மாலை 4 ஆராதனைகள் நடைபெறுகின்றன. மல்லாகத்தில் 30விசுவாசிகளும் முருங்கையபுலத்தில் 35 விசுவாசிகளும் மாசியப்பிட்டியில் 45 விசுவாசிகளும் கட்டுவனில் 30 விசுவாசிகளும் உள்ளனர். மொத்தமாக 390 விசுவாசிகளும், 430 ஓய்வுநாள் பாடசலை பிள்ளைகளும், 16 ஆசிரியர்களும் உள்ளனர். 8 இடங்களில் சிறுவர் ஊழியம் நடைபெறுகின்றது.

எமது திருச்சபையில் 4 இடங்களில் உபவாச ஜெபமும், 7 இடங்களில் வீட்டுகூட்டங்களும் 2 இடங்களில் ஜெபக்கோபுரமும், வேதாகம படிப்பு, பாடல் பயிற்சி, ஊழியர்களுக்கான ஜெபம், வாலிபர் ஜெபம், வியாதிப்பட்டோருக்கான விசேஷ ஜெபம், பெண்கள் ஜெபம், மருத்துவ சேவை ஊழியம், வீடுகள் சந்திப்பு ஊழியம், கிராமங்கள் தோறும் சுவிசேஷ ஊழியம் என்பன நடைபெற்று வருகின்றன.

கல்வாரி திருச்சபை 30 ஆண்டுகளைக் கடந்து வர சபை முன்னோடிகளின் ஜெபமும் அர்ப்பணிப்புமே காரணமாகும். ஒரு சிறு கூட்டத்தோடு ஆரம்பித்து இவ்வளவு பெருகுவதற்கு கிருபை செய்த கர்த்தருக்கே மகிமை.

## தொண்டமனாறு பிராந்தியத்திலிருந்து போதகர் பத்மஸ்ரீதரன் கல்வாரி குடும்பத்தின் வரலாற்று சுவடுகள் தானி: 12.3

அருட்பணியாளர்களின் வரிசையில் ஆத்துமபார அர்ப்பணிப்புடன் இலங்கை மண்ணில் கால்பதித்த அன்னை அனா லாசன்ஸ், கல்வாரி குடும்பத்தில் முதல் முன்னோடியாக முன்னெடுத்து வந்த ஊழியப்பணியில் போதகராக இணைந்து கொண்ட உத்தம ஊழியன் G.S யோசேப் என்போரின் தியாகமான அருட்பணியில் ஆத்தும அறுவடையை பெருக்கவே ஆண்டவரின் பணியில் உண்மை ஸ்தானாதிபதியாக நமது தந்தை போதகர் லெஸ்லி மத்தியூஸ் இவர் களின் இடைவிடாத ஜெப ஊழியத்தில் விழுது விட்டு இன்று விருட்ஷமாக பரவி நிற்கும் கல்வாரி குடும்பம் உயிருள்ள இயேசு கிறிஸ்துவிற்கு மகிமையாக சாட்சி பகிர்கின்றது.

நமஸ்காரம், நல்லுறவு, நற்செய்திப்பணி என்ற மூன்று பக்க தரிசனத்தை முப்பது ஆண்டு அகவையை பூர்த்தி செய்யும் நமது கல்வாரி குடும்பத்தினை தொண்டமனாறு கிளை சபையாக மனப்பூர்வமாக வாழ்த்துகின்றோம்.

### தொண்டமனாறு ஊழியத்தின் அறிக்கை

2002ம் ஆண்டு வன்னியில் இருந்து வந்து குடியமர்ந்த ஒரு குடும்பத்தை போதகர் கனகராஜாவுடன் சென்று சந்தித்து ஜெபித்து வந்தோம். இக்காலத்தில் துண்டுபிரதி சுவிசேஷ ஊழியத்தை தொலைக்காட்சி மூலமாக அறிந்தோம். 2004ம் ஆண்டு தொண்டமனாறு கிராமத்தை குறித்து கர்த்தர் ஒரு பாரத்தை கொடுத்தார். 2004ம் ஆண்டு 7 சிறுவர்களுடன் ஒரு குடிசையில் பாடல்கள்

Pastor
**R. Pathmasritharan**



கதைகள் மூலமாக ஊழியத்தை செய்து வந்தோம். சிறுவர்கள் மூலமாக பெற் றோர்களை சந்தித்தோம். கிழமை நாட்களில் வீடுகள் தோறும் ஜெபக்கூட்டங்களை நடத்தி பிள்ளைகளை சீடத்துவத்திற்குள் வழிநடத்தி ஞானஸ்நானம் கொடுத்தோம்.

2009ம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஞாயிறு ஆராதனையை 16 பேர்களுடன் ஆரம்பித்தோம். கர்த்தர் ஊழியங்களை ஆசீர்வதித்தார். தற்பொழுது 2 இடங்களில் ஞாயிறு ஆராதனையும் 4 இடங்களில் சிறுவர்களுக்கான ஆராதனையும் நடைபெறுகின்றது. ஞாயிறு ஆராதனையில் 60 பேர் வரையில் கலந்து கொள்கின்றனர். சிறுவர் ஆராதனையில் 220 சிறுவர்கள் வரையில் கலந்து கொள்கின்றனர்.

## ஊழிய விபரங்கள்

ஞாயிறு - ஆராதனை
செவ்வாய் - வீடுகள் சந்திப்பு
புதன், வியாழன் - வீட்டுக்கூட்டங்கள், வேதப்படிப்பு
வெள்ளி, சனி - உபவாச ஜெபம், வைத்திய சாலை ஊழியங்கள் மற்றும் சுவிசேஷ ஊழியங்கள்

உதவி ஊழியர்கள் - 2பேர்
சிறுவர் ஊழியத்தில் - 5 பேர்

## ஆண்டு 2002

விசுவாசிகள் - 60 பேர்
போதகர் - 1
ஓய்வு நாட்பாடசாலை - 4
ஓய்வு நாட்பாடசாலை பிள்ளைகள் - 220
உதவி ஊழியர்கள் - 2
வீட்டு கூட்டங்கள் - 3
ஓய்வு நாட்பாடசாலை ஆசிரியர்கள் - 5

**மந்துவில் பிராந்தியத்திலிருந்து போதகர் பிறேம்குமார்**
**ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.**


நான் 1988ம் ஆண்டு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டேன். பின்னர் கொக்குவில் தலைமை ஆலயத்தில் உதவிப்பணி செய்து வந்தேன். பின் நாட்டின் சூழ்நிலையால் வன்னிப்பகுதிக்கு 1995ம் ஆண்டு சென்று தேவ பணிக்கு என்னை ஒப்புக்கொடுத்தேன். 2002ம் ஆண்டு வரை வன்னியில் ஊழியம் செய்தேன்.மறுபடியும் நாட்டின் சூழ்நிலை சாதகமான போது நான் திரும்பி யாழ்ப்பாணம் வந்தேன். வன்னியில் எங்களோடு ஆராதித்த விசுவாச குடும்பமும் தங்கள் சொந்த இடமான மந்துவிலுக்கு வந்தார்கள். அவ்வேளை நான் அவர்களை சந்தித்தேன். அப்போது அப்பிரதேசத்தை குறித்து ஒரு பாரத்தை ஆண்டவர் எனக்கு தந்தார். நான் 2002ம் ஆண்டு என் மனைவி பிள்ளைகளோடு மந்துவிலில் ஒரு வீட்டில் ஆராாதனை ஆரம்பித்தேன். ஆரம்பித்த நாளில் நானும், ஒரு குடும்பத்தினரும் மட்டுமே இருந்தோம். அதுமட்டுமல்லாது ஆரம்ப ஆராதனையில் எமது தலைமை போதகரும் கலந்துகொண்டார். பின்னர் ஆண்டவர் தனது இராஜ்ஜியத்தை வளரச் செய்தார். 2003ம் ஆண்டு சரசாலை பகுதியில் ஒரு கிளைச் சபையையும் 2008ம் ஆண்டு கெருடாவிலில் 2வது கிளைச்சபையையும் மூன்றாவது கிளையாக 2011ம் ஆண்டு கிளாலியில் சபை ஆரம்பிக்கவும் கர்த்தர் கிருபை செய்தார். எமது சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 65 பேரும், 70 ஓய்வுநாட் பாடசாலை பிள்ளைகளும் உள்ளனர். இவ்வாறு தேவன் நமது சபையை பெருகச்செய்வதற்காக நம் மீட்பர் இயேசு கிறிஸ்துவுக்கு கோடான கோடி நன்றி செலுத்துகின்றோம். எமது தலைமை ஆலயம் 30 ஆண்டுகளை கடந்து வர தேவன் செய்த கிருபைக்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்துகின்றோம். அத்துடன் எதிர்காலத்திலும் பல சபைகள் ஸ்தாபிக்கப்படவும் சிறந்த தலைவர்கள் உருவாகுவதுமே எமது ஜெபம். எமது சபை சார்பா கவும் அங்கத்தவர்கள், விசுவாசிகள், ஓ.நா.பாடசாலை பிள்ளைகள் சார்பாகவும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின் றோம்.

Pastor
**V. Premkumar**



## வன்னிப் பிராந்தியத்திலிருந்து போதகர் டிலோன்

Pastor
**N. Dillon Ratna**



தேவனுடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும், எமது கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயமானது ஒழுங்குபடுத்தப்பட்டு 30 ஆண்டுகளை ஊழியத்தில் வெற்றிகரமாகக் கடந்துவர தேவன் கிருபை செய்தார். தேவன் தம்முடைய இராஜ்ஜியத்தை கட்டுவதற்காக எமது திருச்சபையையும் தேவன் பாவித்துள்ளார் என்பதில் பெருமகிழ்வடைகின்றோம். 30 ஆண்டுகள் கடந்து சென்ற வெற்றியான வாழ்வை பார்க்கிலும் இனிவருகின்ற காலங்களில் தேவன் தம்முடைய இராஜ்ஜியத்தை கட்டுவதற்கு எமது திருச்சபையையும் பயன்படுத்துவாராக. அநேக திருச் சபைகளுக்கும் தலைவர்களுக்கும் எமது சபை முன்மாதிரியாக அமைய வாழ்த்துகிறோம்.

1995ம் ஆண்டு யாழ் குடாநாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலையின் நிமித்தம் ஒக்டோபர் மாதம் 30ம் திகதி யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறினோம். நவம்பர் மாதம் 5ம் திகதி வன்னிக்கு சென்று போதகர் ஆமோஸ் குடும்பத்துடன் பெரியமடு சென்றோம். போதகர் மோகன், போதகர் அகஸ்ரீன் கிளிநொச்சிக்கு வந்துசேர்ந்தனர். அக்காலத்தில் போதகர் அகஸ்ரீன் உடையார்கட்டில் ஊழியத்தை ஆரம்பித்தர். பின்பு பெரியமடுவிலும், அக்கராயன், ஒட்டிசுட்டான், புனியங்குளம், முழங்காவில், ஆனைவிழுந்தான், முள்ளியவளை என பல இடங்களில் ஊழியங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 2001ம் ஆண்டில் கிளிநொச்சியிலும் ஊழியங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

யுத்த சூழ்நிலை 2009ம் ஆண்டில் அதிகரித்தபடியினால் எமது வன்னி திருச்சபைகளையும் அது பாதித்தது. உடமைகள், சொத்துக்களை மட்டுமல்லாது

உயிரிழப்புக்களையும் சந்திக்க நேர்ந்தது. தொடர்ந்தும் இடம்பெயர்ந்து கொண்டிருந்தோம். 2009ம் ஆண்டு ஏப்ரல் மாதம் வன்னிப் பகுதியிலிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டு வவுனியாவில் உள்ள முகாம்களில் தங்கவைக்கப்பட்டோம். தலைமை ஆலயத்தின் உதவியோடு முகாம்களிலும் ஊழியங்கள் நடைபெற்றன.

2010ம் ஆண்டில் முகாம்களில் இருந்து மீள் திரும்பியவர்கள் கிளிநொச்சிக்கும் இன்னும் தங்கள் சொந்த ஊர்களுக்கும் அனுப்பப்பட்டனர். இச் சூழ்நிலையில் மீளவும் ஊழியத்தை ஆரம்பிக்க தீர்மானித்தோம். சொந்த இடமில்லாமல், ஆலய கட்டிடம் இல்லாமையினால் வீடுகளில் ஆராதனைகள் நடைபெற்றன. பலவிதமான நெருக்கடிகள் மத்தியில் தேவனுடைய கிருபையினால் 2010ம் ஆண்டு ஏப்ரல் 28ம் திகதி கிளிநொச்சி, பாரதிபுரம், முறிகண்டி போன்ற இடங்களிலும் பின்பு ஆனை விழுந்தான் பகுதியிலும் ஊழியத்தை ஆரம்பித்து நடத்திவருகிறோம்.

சகோதரன் அமிர்தசீலன், ஜெயானந்தன் எம்மோடு இணைந்துகொண்டு பொறுப்பாக ஊழியத்தை செய்து வருகிறார்கள். சகோதரன் கிறிஸ்றி, மதன் இவர்களும் எமது ஊழியத்திற்கு உதவி செய்து வருகிறார்கள். சுமார் 60 குடும்பங்களை சேர்ந்த 120 பேர் வரையில் ஒவ்வொரு வாரமும் கலந்துகொள்கின்றனர். முதல் வாரத்தில் திருவிருந்து ஆராதனை நடைபெறுகின்றது. ஓய்வுநாட்பாடசாலை 8ம் கட்டை, முறிகண்டி, பொன்னகர், பாரதிபுரம் போன்ற இடங்களில் நடைபெறுகின்றன. 70 பிள்ளைகள் கலந்து கொள்கின்றனர். வீட்டுகூட்டங்கள் சாந்தபுரம், பாரதிபுரம், பொன்னகர், கிளிநொச்சி பகுதிகளில் நடைபெறுகின்றது.

தேவகிருபையின்படி வருகின்ற காலங்கள் எமது திருச்சபைக்கு ஆசீர்வாதமாக இருக்கவேண்டுமென்று வாழ்த்துகிறோம். சங்கீதம் 65:4 ம் வசனத்தின்படி "உமது ஆலயமாகிய உமது வீட்டின் நன்மையால் நம் தேசம் திருப்தியாகும்."

## கல்வாரி பூரணசுவிசேஷ தேவாலயம்
## – வாலிப ஊழியம் "கல்வாரி கழுகுகள்"



தேவராஜ்ஜியத்தின் பணியில் எமது திருச்சபை 30 ஆண்டுகளை நிறைவு செய்ததையிட்டு கல்வாரி கழுகுகளாகிய நாம் பெருமகிழ்ச்சிடைகின்றோம். எமது திருச்சபையின் வாலிப ஊழியமானது "கல்வாரி கழுகுகள்" எனும் பெயரிலேயே அழைக்கப்பட்டு வருகின்றது.

1984ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட எமது வாலிப ஊழியத்தின் முதல் தலைவராக போதகர் ஏ.சி. கிறிஸ்ரோபர் அவர்கள் பணியாற்றியுள்ளார். அன்றிலிருந்து இன்றுவரை பலர் வாலிப தலைவர்களாக பணியாற்றி வாலிப ஊழியத்தை முன்னேற்றப்பாதையில் கொண்டு சென்றுள்ளனர். அவர்களை நாம் மறந்துவிடமுடியாது. எமது கழுகுகள் ஊழியம் இவ்விடத்திற்கு வருவதற்கு தேவன் அவர்களை பயன்படுத்தியுள்ளார்.




இன்றும் பல வாலிபர்கள் எமது கிளை சபைகளிலும், தலைமையாலயத்திலும் குழுத்தலைவர்களாக இணைந்து வாலிப ஊழியத்தை முன்னெடுக்கின்றனர். அவர்களின் சேவை பாராட்டுக்குரியது. இன்று எமது வாலிப ஊழியமானது பன்முகப்படுத்தப்பட்ட வகையில் வளர்ச்சியடைந்துள்ளது. முன்னெடுக்கப்படும் ஊழியங்கள் பின்வருமாறு...

- ஒவ்வொரு மாதமும் 1ம், 4ம் ஞாயிற்றுக்கிழமைகளில் ஆராதனை முடிவில் வாலிபர் ஒன்றுகூடல்.

- ஒவ்வொரு மாதமும் 1ம், 4ம் வெள்ளிக்கிழமைகளில் மாலைவேளைகளில் வாலிபர் ஜெபம்
- ஒரு நாள் நிகழ்வுகள்
- வருடாந்த வாலிபர் பாசறை
- சஞ்சிகை ஊழியம்
- விளையாட்டு நிகழ்வுகள்
- சமூக சேவை
- இறுவட்டு வெளியீடு
- நற்செய்தி அறிவிப்புக்கள்




போன்ற இத்தகைய சேவைகள் மூலம் வாலிபர்களை ஆதாயப்படுத்தி, சபையை திடப்படுத்தி வருகிறோம். ஒவ்வொரு வருடமும் நடாத்தப்படும் வாலிபர் பாசறைகளின் மூலம் அநேக வாலிபர்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டுள்ளனர். அநேகர் தேவ ஊழியத்திற்காய் தமது வாழ்வை அர்ப்பணித்து பல சபைகளில் பணியாற்றுகின்றனர். கடந்த 30 ஆண்டுகளாக எமது திருச்சபையின் வாலிப ஊழியத்தின் மூலம் வாலிபர்கள் மத்தியில் தேவ இராஜ்ஜியம் கட்டப்பட்டுள்ளமை எமக்கு கிடைத்த பாக்கியமாகும்.

விளையாட்டுக்களிலும், வேதாகம போட்டிகளிலும், கலைநிகழ்ச்சிகளிலும் கடந்த நாட்களில் எமது கல்வாரி கழுகுகள் தேவகிருபையால் வெற்றிகளையும் பாராட்டுக்களையும் பெற்றுள்ளனர். தொடர்ந்தும் தேவனுக்காய் எழும்பிப் பிரகாசிக்க நாம் ஆவலாக உள்ளோம். 30 ஆண்டுகளாக எமது திருச்சபை வாலிபர்களை

பயன்படுத்திய கர்த்தர், தமது வருகை வரைக்கும் தேவ நாம் மகிமைக்காய் நம்மவர்களை பயன்படுத்துவார் என விசுவாசிக்கின்றோம். தேவன் ஒருவருக்கே சகல துதியும் கனமும் மகிமையும் உண்டாவதாக.

கிறிஸ்துவின் பணியில்,
ச. கஜேந்திரன் (விக்ரம்)
Youth Pastor










# திரும்பிப் பார்க்கிறோம்






முன்னாள் போதகர்
ஜி.எஸ்.ஏ. ஜோசப்



1984 ஆலயத் திறப்புவிழா



முன்னாள் போதகர் ஜோசப், போதகர் லெஸ்லி
குடும்பங்களுடன்ஆன்டி அனா லாஸன் அவர்கள் - 1984



கொக்குவிலை விட்டு
தனது தாயகம் நோக்கிய பயணம் - 1986




ஊழியர் திருநிலைப்படுத்தல் ஆராதனை



ஞானஸ்நானம் பெறுதல்



சகோ. சாந்தி மத்தியூஸ் ஓய்வுநாட் பாடசாலை
ஆசிரியர் குழு



பாடல் குழு



*1991ல் புதிய காணியில் ஆலய பிரதிஷ்டை*



தலைமை ஆலயத்துக்கு அஸ்திவாரமிடுதல்
போதகர் [illegible]ஜெ. மத்தியூஸ்,
சகோதரி. கிறேஸ் ஜோசப் சபையார்



புதிய ஆலயம் உருவாக முன்



ஆராதனை ஆராதித்த தேவ மக்கள்

# வாழ்த்துச் செய்திகள்

30


**I would love to be there but alas it is not possible!**
**I enclose a short greeting. I hope I am not too late;**

"I have been associated with Calvary Full Gospel Church for 25 years as the former director of Kingscare, now known as Karuna Action. What impressed me from the beginning was your commitment to serving the poor in your community. You obviously care about the spiritual state of people in the Jaffna region, but you care too about the physical state too. I know that many children who were sponsored will be there worshipping with you on this special occasion.

I know that 'full gospel' has many implications, but your genuine care for those in need, reminds me of Jesus and qualifies you to be truly a 'Full Gospel' church. May you continue to flourish in the rich soil that God has planted you in."

***George Dowdell***

Brother
**George Dowdell**



Pastor
**Larwin Nickelson**



It is a joy for me and our Oikos Churches to be associated with you and your ministries CALVARY CHURCHES OF SRI LANKA. Because after getting to know you and your sincere leadership of your churches I feel it is a honour and joy to write this few words about you.

You and your wife are a wonderful, honest and humble servants of God. You do not boast about you but humbly serving in any ministry asked to minister. You are a good friend and co- worker in the kingdom of God.

May the Lord bless you and your ministies abundantly and may all your dreams come treu in the right time. If the Lord tarries may your ministries celebrate another 30 years of blessings.

As Jer.29.11 says, may your future be blessed and multiplied many times. God,bless you abundantly, Your co- worker in the kingdom,

***Larwin Nickelson,***
Senior Pastor,
Oikos Churches of Switzerland.


**"Give thanks to the LORD, call on His name;**
**make known among the nations what he has done"**
***- Psalm 105:1 -***

Calvary Full Gospel Church Kokkuvil is one of the member churches of the Fellowship of Free Churches of Sri Lanka. Praise God for the ministry, ministers and the members. The church was planted in 1984 by Sis. Hannah from Sweeden and continued by Pastor G.S.A Joseph. Rev. Leslie Mathews took over the church in 1989 and the church started to grow under his leadership and his pastoral team, they have many branches and serve the Lord in many parts of the Northern province of Sri Lanka.

I take this opportunity to wish the pastoral team of Calvary Church for their 30th anniversary. Our prayer is for the Lord to move powerfully and bring hundreds and thousands of souls to His kingdom through this church.

**Rev.S.Nithiyanandhan**
Chairman
Fellowship of free Churches of Sri Lanka

## Pastor **Nithiyanandhan**



## Message of Felicitation

What a joy it is to be invited to send a message of greetings to the Rev. Leslie Matthews and the members of the Calvary Church on this special day when you keep the 30th Anniversary of your Church.

This special Day is going to be a time of Celebration and Thanksgiving for the faithfulness of God to Rev.Leslie a wonderful and caring Pastor, brother and friend to many of us including members of the Calvary Church congregation. We are aware that you and your congregation went through a very rough and difficult period during the 30 years but your consistency, prayer and commitment not only helped tc come out triumphantly but during these years your congregation rapidly grew both in numbers and also in maturity.

Under your dynamic but humble leadership your congregation has been rapidly multiplying and taking root in different parts of Northern Province and in Europe, becoming a multiplying church without being identified as a denomination.

Your congregation is indeed a People' Church for we thank our God the Father and Saviour Jesus Christ. This dear land Sri Lanka cries out from the strain of the torrential floods, the ravages of the protracted war of 30 years, the destruction of the tsunami and the very burden life. During this period of turmoil, the Lord graciously raised you and your church as beacon of light in the midst of darkness. The need of the hour is true reconciliation and co-habitation of people of all races, languages and religions in true restoration peace and harmony within oneself, with society and with nature but above all with our maker and creator God.

***Dr.Sam Thevabalasingham***

Pastor
**Dr. Sam Thevabalasingha**



## FELICITATION

It is my joy and pleasure to congratulate the ***Calvary Full Gospel Church*** on its **30th Anniversary.** We honour Pastor Leslie and Shanti Mathews for the yeoman service they have rendered to the Church and cause of the Gospel in the Jaffna area.

The Church was founded in 1984 by Sister Hannah Larson from Sweden. She tirelessly worked to build the young Church until Pastor Joseph was made its Pastor.

In 1989 Leslie Mathews was appointed the Pastor. He worked diligently, travelling long distances and today the Church stands as a lighthouse for the people of Jaffna. The Church has over 1500 members and many co-workers.

We wish them many years of joyful service in the vineyard.

**Dr. Verghese Chandy,**
New Covenant Church,
Colombo 06.

Pastor
**Dr. Verghese Chandy,**
New Covenant Church,
Colombo 06.



PASTOR & CONGREGATION
CALVARY FULL GOSPEL CHURCH
JAFFNA.

## 30TH ANNIVERSARY CELEBRATION


We take pleasure in sending greetings to Calvary Full Gospel Church, Jaffna, on the occasion of their Completion of thirty years of Fruitful Ministry in Jaffna.

It has been a joy to us to watch Calvary grow from small beginnings, under the Leadership of Pastor Leslie Mathews, who is a man of action, and his very capable wife Sister Shanthi with support from all the stalwart Workers and Dedicated Staff, but not forgetting the wife of Late Pastor Joseph and her two Sons Gerald and Johnson. We wish Calvary Church, many more fruitful years of Ministry.


**For the Lord will not forsake His people, for His great name's sake.** **- I Samuel 12:22 -**

*Pastor Josiah Philip & Congregation*

Pastor
**Josiah Philip**



Sister
**Anita Vorde**



I thank you for your Invitation to me for the Church Anniversary and Thanksgiving on the 14th of February 2014

I am also Thankful to God for he has led ,guided and blessed the Church during this period of time. It is my sincere wish and prayer that God will continue His good work in this Church in the future.

I regret my inability to be present on this occasion.

*Anita Vorde*

## 30ம் ஆண்டு நிறைவு விழா

முப்பதாம் ஆண்டின் நிறைவினை காணும் கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயத்தின் இயேசுவின் இணையற்ற நாமத்தில் வாழ்த்துவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றோம்.

தாங்கள் எதிர்கொண்ட சாவால்கள் அனைத்திலும் கர்த்தருக்கு உண்மை யாய் இருந்து 30 ஆண்டுகள் கர்த்தரின் திருப்பணியில் வெற்றிநடை போடும் கல்வாரிக் குடும்பத்தை தேவனின் தரிசனத்தை நிறைவேற்றி தேவ இராஜ்ஜி யத்தை யாழ் மண்ணிலும் இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களிலும் ஊழியம் கட்டியெழுப்பப்பட இயேசுவின் இணையற்ற நாமத்தில் வாழ்த்துகின்றோம்.

இத் தருணத்தில் தலைமை போதகர் வண.லெஸ்லி மத்தியூஸ் குடும்பத்தையும் யாழ் போதகர் ஐக்கிய தலைவரான கல்வாரி நிறைவேற்றுப் போதகர் வீரகத்தி கனகராஜாவையும் மற்றும் உடன் போதகர்கள், ஊழியர்கள் அங்கத்தவர்களையும் விசுவாசிகளையும் அனைவரையும் அன்புடன் வாழ்த்து கின்றோம்.

"அற்பமான ஆரம்பத்தின் நாளை யார் அசட்டை பண்ணலாம்?" சகரியா 4 :10

யாழ். கிறிஸ்தவ சபைகள் ஸ்தாபனங்களின் ஐக்கியம்



**30 ஆண்டுகளை கடந்து வரும் கல்வாரி குடும்பத்தினரையும், போதகர்கள் ஊழியர்கள் அங்கத்தவர்களையும் மனதார வாழ்த்துகின்றேன்.**

கல்வாரி சபையில் கர்த்தரை நான் ஏற்றுக்கொள்ளவும், 2013 ஒக்டோபரில் இஸ்ரேல் பயணத்தை வாய்க்க செய்த தேவனுக்கு மகிமையும் கனமும் உண்டாவதாக.

நான்.... உன்னை ஆசீர்வதித்து,
உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்,
நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்.
ஆதியாகமம் 12:2

நாகலிங்கம் இரகுநாதன் டானியேல்
100/2 சம்பியன் லேன்,கொக்குவில்

தேவ பணியில் 30வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும்
கல்வாரி பூரண சுவிசேஷ
தேவாலய போதகர்கள், ஊழியர்கள்,
விசுவாசிகளை வாழ்த்துகிறோம்.

**Angel Industries**

கிழங்குப்பொரி, நெய் பிஸ்கட், முறுக்கு, பேபி மிக்ஷர்,
பைற்ஸ், இனிப்பு முறுக்கு, குக்குறி, விசேட மிக்ஷர்
இன்னும் பல தயாரிப்புக்கள் எம்மிடம் உண்டு.
மகிழ்ச்சிகரமான நிகழ்வுகளுக்கு தேவையான
மெது தயாரப்புக்களை குறைந்த விலையில்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள மெது நிறுவனம்
தற்போது யாழ்நகரில்

**ஏஞ்சல் சென்றர்**
இல.11, நவீன சந்தை, வெளிப்புறம், யாழ்ப்பாணம்.
உரிமையாளர் செ. சுரேஸ்குமார்
தொ.பே. 021 222 8691, 0776701221, 0779645233

கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயத்தின் 30 ஆண்டுகளை
நிறைவுசெய்யும் இவ்வாண்டில் சபை தலைமைப் போதகர் லெ.ஜே. மத்தியூஸ்
குடும்பத்திற்கும், சகல போதகர்கள், ஊழியர்களுக்கும் விசுவாசிகளையும்
அங்கத்தவர்களையும் எமது குடும்பமாக மனதார வாழ்த்துகிறோம்.

# Home Style
## Works Co.
## Building Constructor

சகலவிதமான கட்டட வேலைகளும் மாபிள் வேலைகளும்
திறமான முறையில் செய்துதரப்படும்.

உரிமையாளர் இ. கருணாகரன்
இல. 15/22, இராஜ வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0779228752, 0775779282

30 ஆண்டுகளை
கடந்துவரும் கல்வாரி பூரண சுவிசேஷ
தேவாலயத்தை
மனதார வாழ்த்துகிறேன்

# ஏசியன் தளபாடம்



வீடு மற்றும் அலுவலகங்களுக்கு தேவையான
அனைத்து பொருட்களையும் ஒரே இடத்தில்
மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
மற்றும்
வெளிநாட்டுக்கான பொதிகள் சேவை
3 நாட்களுக்குள் உங்கள் இடத்துக்கே
அனுப்பிவைக்கப்படும்.
மற்றும்
யாழ்ப்பாணம் - கொழும்பு.
கொழும்பு - யாழ்ப்பாணம். பார்சல்
சேவை 24 மணிநேரத்துக்குள்
அனுப்பிவைக்கப்படும்.

இல. 133, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0773583879, 021 222 7892

தேவராஜியத்தில்
30 வருடங்களை நிறைவு செய்யும் கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலய
போதகர்கள், ஊழியர்கள் விசுவாசிகள்,
அங்கத்தவர்களை தேவ நாம மகிமைக்காக வாழ்த்துகிறேன்.

# ஆரோன் தையலகம்



Aron Trailors

ஆண்கள் பெண்களுக்கான
ஆடைகள் தைத்துக்கொடுக்கப்படும்

இல. 328, இராசவீதி,
கல்வியங்காடு
தொ.பே : 0778689293

30 ஆண்டுகளை கடந்து வரும் கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயத்தை
சகல போதகர்கள், ஊழியர்கள், அங்கத்தவர்கள் விசுவாசிகள்
யாவரையும் மனதார வாழ்த்துகிறேன். கர்த்தருடைய மகிமையில் இயேசுவின்
வருகை வரையில் பணிதொடர வாழ்த்துகிறேன்.

# சாலினி

*வெல்டிங் வேக்ஸ் சொப்*

Shalini Welding Work Shop

சகலவிதமான வெல்டிங்
வேலைகள், கேற் கிறில்.
லேத் வேலைகள்
உழவு இயந்திரப் பெட்டி செய்தல்
திருத்த வேலைகள்
செய்து கொடுக்கப்படும்.

*இராசவீதி, கோப்பாய்,*
*தொ.பே. 0779120422, 0779186203*



MENU BUILDERS
MB
CONTRACTORS EARTH MOVERS AND SUPPLIERS OF BUILDING MATERIALS
ICTAD Reg NO: C - 12244
கட்டிட நிர்மாணம்
கட்டங்கள் திருத்த வேலைகள்
மாபிள் வேலைகள்
தெராசோ வேலைகள்
கொங்கிறீற் வேலைகள்
வீதி புனரமைப்பு வேலைகள்
நீர்ப்பாசன கால்வாய்கள் புனரமைப்பு வேலைகள்
குறித்த வேலைகளை தரமாகவும் குறித்த காலத்திலும் செய்வதற்கு எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.
R.Rajinthan
15/20, Raja Veethy
Thirunelvely, Jaffna.
Tel : +94771372887
Email : menubuilders2013@gmail.com

# சமூகப்பணிச் செய்திகள்

# 30

# CALVARY GRACE CARE

Since the founding of calvary full Gospel mission initiated by missionary Hanna Larson, social welfare & care has been an integral part of its mission.




I was greatly challenged through a TBN christian programme on 4th march 2010. This sparked within me an increased desire to help those in need.

## OUR GOAL

"**EMPOWER** People for Transformation"

## Activities

**E** - Emergency Relief
**M** - Medical Support
**P** - Peace & Reconciliation
**O** - obstruction of environmental pollution Tree-planting
**W** - Water & Sanitation well cleaning, well renovation and construct the new wells.
**E** - Educational Support for the Needy students
**R** - Re-establish and diversify livelihood infrastructure and activities



## Children

Children are indeed a wonderful gift from God, but how hard it is for parents who cannot afford to provide the basic amenities for their children, due to the cycle of poverty they are in.

Realizing this need, during the last year CGC provide school accessories and monthly scholarship for education, bicycles and nutritious food for needy children.

Bicycles distributed 260
School Accessories distributed 1500
Nutritious food supplement 550
Monthly scholarship 75





## Livelihood

The activities of the Livelihood sector centres on uplifting vulnerable persons and families and improving their standards of living. This is achieved through the following activities.

Poultry farming 65
Goat Farming 20
Cow Farming 02
Small Businesses 30








## Medical Assistance

250 monthly Patient received treatment from our medical clinic

## Emergency Relief

We have distributed food and non food items (by the support of Calvary's Youth) among flood victims.







## Appreciations

We thank God for His guidance, faithfulness, blessings and provision.

## We thank

Our Partners, Believers and friends who gave of their resources and time generously.



Calvary Grace Care Team

**Mrs. Shanthi Mathews**
Founder C.G.C

# தரிசனம்



## தரிசனத்தை நோக்கி!

தரிசனம் இல்லாமல் மக்கள் அழிந்து போவார்கள் என்ற வார்த்தையின் படி தரிசனத்தோடு கல்வாரியின் பயணம் 1984ம் ஆண்டு ஆரம்பித்தது. ஆரம்பம் அற்பமாயிருந்தது ஆனாலும் கர்த்தர் எங்கள் ஆரம்பத்தை அசட்டை பண்ணாமல் சிறிய விதையாக விதைக்கபட்ட தேவ இராஜ்ஜியத்தின் விதையை இன்று நீங்கள் பார்க்கும் பெரு விருட்சமாக வளரச்செய்தார்.

### ஒழுங்கு படுத்தலும் ஸ்தாபித்தலும்

1984ம் வருடம் ஜனவரி 12ம் நாள் கொக்குவில் பிறவுண் வீதியில் தொழில்நுட்பக் கல்லூரிக்கு முன்னால் இருந்த காலஞ்சென்ற மிஷனரி அனா லாசன் அவர்களின் இல்லத்தில் அவருடைய தலைமையில் முதல் செயல் கூட்டம் ஒன்று நடைபெற்றது. போதகர்.யோசப் மற்றும் நானும் கூடி அதிக ஜெபத்தோடும் கர்த்தருடைய வழிநடத்துதலோடும் பெப்ரவரி 18ம் திகதி கல்வாரி தேவாலயம் என்ற பெயரில் சபையை ஒழுங்குபடுத்தி ஆலய பிரதிஷ்டையோடு ஆரம்பிப்பது என்று தீர்மானித்தோம். அன்று எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அடங்கிய கடிதம் யுத்தத்திலும் பாதுகாக்கப்பட்டது. இது தேவனுடைய கிருபையும் கர்ததர் இந்த சபையின் மீது வைத்திருக்கிற அன்புமாகும். இந்த சபை கர்த்தருடையது. 1995ம் ஆண்டு மக்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து போகும்போது ஆலயத்தின் முக்கிய ஆவணங்களை எடுத்துச்சென்று மீண்டும் வரும்போது கவனமாக கொண்டு வந்த போதகர். கனகராஜா அவர்களின் விசுவாசத்தை

## Senior Pastor
## L.J. Mathews



பாராட்டுகின்றேன். சபையை குறித்து ஸ்தாபகர் அனாலாசன் அவர்களின் முடிவை நாம் மதிக்கின்றோம். ஏலிம் சிறுவர் இல்லத்தை ஆரம்பித்தார். இல்லத்தில் உள்ளவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட இவ்வூழியமானது பின்பு ஏலிம் தேவாலயம் என்ற பெயரில் மாற்றமடைந்தது. மிஷனரி அனா அவர்கள் பல தியாகங்களோடும் பலருடைய உதவியோடும் ஏலீம் என்ற பெயரில் நடத்தி வந்த ஊழியமானது சபையாக ஸ்தாபிக்கப்பட்டது. இதற்காக அஸ்திபாரப்பணியில் பலரை பயன்படுத்தி வந்திருக்கிறார். அவர்களில் சகோ.டார்லிங்சன் அவர்களை நாம் மறக்க முடியாது. அனைவருக்காகவும் கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறோம்.

மிஷனரி அனா லாசன் அவர்கள் தாய் நாடான சுவீடனுக்கு போன பின்னர் சபைக்கு தேவையான நிதி திரட்டும் பொறுப்பையும் நான் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. இன்று வரை கர்த்தர் எங்களுக்கு தேவையானதை தந்து இந்த சபையை நடத்தி வருகின்றார்.

## முதல் பயிற்சி

கலாத்தியர்.2:2 "நான் தேவ அறிவிப்பினாலே போய், புறஜாதிகளிடத்தில் நான் பிரசங்கிக்கிற சுவிசேஷத்தை அவர் களுக்கு விவரித்து காண்பித்தேன், ஆயினும் நான் ஓடுகிறதும் ஓடினதும் வீணாகாதபடிக்கு எண்ணிக்கையுள்ளவர்களுக்கே தனிமையாய் விவரித்து காண்பித்தேன்."

1984ம் ஆண்டு சபையில் இருந்த 37 பேரில் 12 பேரை தெரிந்து கொண்டு ஒவ்வொரு வாரமும் 2 மணி வகுப்புக் களை ஆரம்பித்தேன். அப்பயிற்சி திட்டத்தில் கலந்து கொண்டவர்கள் இன்றும் ஊழியத்தில் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் வீ.கனகராஜா அவர்கள் நிறைவேற்று போதகராக எங்களோடு ஊழியம் செய்து வருகிறார். இரண்டாவது வேதாகம பயிற்சி நிலையம் 1993ம் ஆண்டில் குறுகிய காலப்பாடத்திட்டம் ஒன்று ஆரம்பித்தோம்.18 பேர் பயிற்சி பெற்றார்கள். வேறு சபையை சேர்ந்தவர்களும் இதில் படித்தார்கள். பயிற்சி பெற்றவர்களில் ஜெனோ, டிலோன், ஆமோஸ், பிறேம்குமார், சுஜாத்தா, ஆஷா, டானியல் சந்திரன் ஆகியோர் கர்த்தருடைய ஊழியத்தை செய்து வருகிறார்கள்.

எமது ஊழியர்களுக்கு ஊழிய பயிற்சி கொடுத்து அவர்களை ஆயத்தப்படுத்தி தந்த இலங்கை வேதாகம கல்லூரி, கொழும்பு இறையியல் கல்லூரி, மற்றும் அசெம்பிளி ஒவ் கோட் வேதாகம கல்லூரிகளுக்கு எமது நன்றிகள்.

### *சபை வளர்ச்சி*

யுத்தத்தை யாரும் விரும்பவில்லை, நாங்களும் விரும்பவில்லை 30 வருட யுத்த காலம் எங்களுக்கு மிகவும் பயங்கரமான காலம், மனிதன் யுத்தத்தை ஆரம்பித்தான் கர்த்தர் யுத்தத்தை சபை வளர்ச்சிக்கு பயன்படுத்தினார். யுத்த காலத்தில் கர்த்தர் எங்களை சிதறடிக்கப்பண்ணி அகதி முகாம்களில் நற்செய்திப்பணி செய்வதற்கு கிருபையும் பெலனும் தந்தார். அதனால் சபை வளர்ந்தது. 2தீமோத்தேயு.4:2ல் **"சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய் திருவசனத்தை பிரசங்கம் பண்ணு!"** என்ற வார்த்தையின்படி நாம் செய்த ஊழியத்தைக் கனப்படுத்தி கர்த்தர் ஜனங்களை எமக்குத் தந்தார்.

### *சிறியது பெரியதானது*

முதல் கிளை சபை திருநெல்வேலியில் ஆரம்பிக்கப்பட்டது. அப்பொழுது புஷ்பராஜா அவர்கள் போதகராயிருந்தார். அதன் பின்பு சபை விஸ்தரிக்கப்பட்டது. 1995ம் ஆண்டுவரை யாழ்ப்பாணத்தில் மட்டும் ஊழியம் செய்து கொண்டிருந்த எங்களை 1996ம் ஆண்டு யுத்தம் ஆரம்பித்தபோது கர்த்தர் வன்னி பகுதிக்கு மிஷனரிகளாக அனுப்பினார். அப். 8ல் சிதறடிக் கிற சீஷர்களை போல எங்கள் மக்களையும் சபை ஸ்தாபிக்கும் ஊழியத்தில் பயன்படுத்தினார்.

வவுனியா வரை சபை ஸ்தாபிக்கப்பட்டது.போதகர். டிலோன், அகஸ்ரின், ஜோசப், இராஜன் ஆகியோர் வன்னி, வவுனியா பகுதிகளில் பணியை ஆரம்பித்தனர். யுத்தத்தில் ஒருபக்கம் அழிய மறுபக்கம் தேவனுடைய இராஜ்ஜியம் கட்டப்பட ஆரம்பித்தது. சபையை அழிக்க திட்டமிட்டவர்கள் அழிந்தார்கள். சபை வளர்ந்தது. ஆயுதம் ஏந்தினவர்களும் ஆண்டவரை அறிந்து கொண்டு ஆண்டவருடைய பணிக்கு தம்மை அர்ப்பணித்தார்கள். இது கர்த்தருடைய செயல்.

நற்செய்திப்பணி, சபை ஸ்தாபித்தல், சீடர்களை உருவாக்குதல், அவர்களை தலைவர்களாக்குதல் போன்ற ஊழியங்களில் மிகவும் உறுதியாக இருக்கிறோம். தகுதியும், திறமையும், வாஞ்சையும் உள்ளவர்களுக்கு இங்கு ஊழியம் செய்யும் வாய்ப்புக்கள் உண்டு. சமுதாயத்தால் தள்ளப்பட்டவர்களில் அநேகரை தெரிந்து கொண்டு தகுதிப்படுத்தி இன்று எங்கள் மத்தியில் பயன்படுத்தி வருகிறார். கர்த்தருக்கே மகிமை.

தேவ ஊழியர்களான கனகராஜா, ஜெனோ, பிரேம்குமார், பத்மசிறி, ஆமோஸ், டிலோன் ஆகியோர் ஆறு பிரதேசங் களுக்கு பொறுப்பாக இருந்து சபைகளை ஸ்தாபித்து தலைவர்களை உருவாக்கி தரிசனத்தை முன்னெடுத்து செல்கிறார்கள். இவர்களுக்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். சபை எண்ணிக்கையிலும் வளர்ச்சி அடைய ஆரம்பித்தது. இ.சு.தி ஐக்கி யத்தினால் அங்கீகாரம் பெற்ற 19 பேர் ஊழியம் செய்கிறார்கள். இன்றுவரை என்னோடு சேர்ந்து நின்றவர்களுக்காக தேவனை நன்றியோடு துதிக்கிறேன். எமக்கு வந்த எல்லா போராட்டங்களிலும் ஊரைப்போல் ஆரோனைப்போல் எங் களுடைய கரங்களை தாங்கினவர்கள் இவர்களே.

### பல பிரிவுகள்

எமது ஊழியத்தில் பல பரிவுகள் உண்டு. உதாரணமாக சபை ஸ்தாபித்தல், தலைவர்களை உருவாக்குதல், சீடத்துவ பயிற்சி, சுவிசேஷப்பணி, சமூகப்பணி, பெண்கள் ஊழியம், சிறுவர் ஊழியம், வாலிபர் ஊழியம் போன்று 23 பிரிவுகள் உண்டு. ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு தலைவர் பொறுப்பாக இருக்கிறார். சகலரையும் கவனிப்பதற்கு கவனிப்புக்குழு ஊழியர்கள் இருக்கிறார்கள். மூப்பர் குழு என்னோடு இணைந்து சபையின் நிர்வாக வேலையை கவனித்துக்கொள்கிறார்கள். அவர்களது மேற்பார்வையின் கீழ் காரியாலயம் இயங்குகின்றது. நாம் சந்தித்த சவால்கள் அநேகம். ஆனாலும் கர்த்தர் கொடுத்த தரிசனத்தை பெற்ற சபையையோ யாரும் அழிக்க முடியாது என்பதற்கு கல்வாரி சாட்சியாக உள்ளது. இந்த சபையை அழிப்பதற்கு பிசாசு பலரை பயன்படுத்தினான். ஆனால் சத்துருவின் கைகளில் எங்களை ஒப்புக்கொடுக்காமல் கர்த்தர் எங்களை தப்புவித்து இன்று நீங்கள் காண்கிறபடியே அவர் தன்னுடைய சபையை நடத்தி வருகிறார்.

**மகிமை கர்த்தர் ஒருவருக்கே..**

# இன்றைய பொறுப்பாளர்கள்

30


## Calvary Full Gospel Church Ordained & Licensed Ministers (Feb 2014)

| | | | |
|---|---|---|---|
| 01. | Pas. L.J.Mathews | Ordained | Kokuvil |
| 02. | Pas. V. Kanagarajah | Ordained | Kovuvil |
| 03. | Pas. S. Jeno | Ordained | Manipay |
| 04. | Pas. S. Amos | Ordained | Alaveddy |
| 05. | Pas. R. Pathmasritharan | Ordained | Thondamanaru |
| 06. | Pas. V. Premkumar | Ordained | Manduvil |
| 07. | Pas. S. Poologasingam | Ordained | Kokuvil |
| 08. | Pas. T. Parteepan | Ordained | Kokuvil |
| 09. | Pas. J. Sanjeevkumar | Ordained | Manipay |
| 10. | Pas. R. Navaratnam | Ordained | Manipay |
| 11. | Pas. K. Luxmanan | Ordained | Manipay |
| 12. | Pas. J.Jonson Arthur | Ordained | Manipay |
| 13. | Pas. S. Sivasithamparanathan | Ordained | Alaveddy |
| 14. | Pas. M. Uthayakumar | Ordained | Manipay |
| 15. | Pas. N.Dillon Ratna | Ordained | Vanni |
| 16. | Pas. A.C.Christopher | Ordained | ................ |
| 17. | Bro.M.Kokilan | Licensed | Manipay |
| 18. | Bro.S.Kajendren | Licensed | Kokuvil |
| 19. | Bro.M.Sanjeevarajah | Licensed | Alaveddy |
| 20. | Bro.G.Prabaharan | Licensed | Kokuvil |
| 21. | Bro.Kumarasami Gunaratnam | Licensed | Kokuvil |
| 22. | Bro. Karthiyesu Gunaratnam | Licensed | Kokuvil |

## Calvary Full Gospel Church Board Of Elders & Deacons (Feb 2014)

**Senior Pastor. L.J. Mathews**
**Rev. A.C. Christopher**
**Rev. R. Navaratnam**
**Bro. V. Manoharan**
**Bro. V. Kanagasabai**
**Bro.K. Gunaratnam**

**Bro. V. Patheeswaran**
**Bro.V. Athithan**
**Bro. T. Suyanthakumar**
**Bro. A. Sivakumar**
**Bro. S. Kopalasingam**
**Bro. S. Balathas**
**Bro. S. Sureskumar**
**Bro. E.Amirthaseelan**
**Bro.V. Jeyananthan**
**Bro.T. Suntharalingam**



கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலய தேவப்பணியாளர்கள்



தலைமை ஆலயம்





மானிப்பாய் பிராந்திய ஊழியர்கள்



மானிப்பாய் ஆலய அஸ்திபாரம் இடுதல்



மானிப்பாய் திருச்சபையார்



காரைநகர், கல்வந்தாழ்வு திருச்சபை



சங்கானை திருச்சபை



அளவெட்டி
பிராந்திய ஊழியர்கள்



அளவெட்டி சிறுவர்கள்



அளவெட்டி திருச்சபையார்




திருநெல்வேலி
திருச்சபையினர்



திருநெல்வேலி
மாதர்குழு



வேலணை திருச்சபை



வேலணை நற்செய்தி கூட்டம்



கொட்டடி
திருச்சபை



கொட்டடி நற்செய்தி
கூட்டம்



பொம்மவெளி சிறுவர் ஊழியம்



நாவலடி சிறுவர் ஊழியம்



அராலி வடக்கு, செட்டியார் மடம்





தொண்டமனாறு திருச்சபை ஊழியர்கள்





அன்று... மந்துவில்
திருச்சபை





இன்று...மந்துவில்
திருச்சபை





வன்னி
பிராந்திய திருச்சபை



வன்னி
பிராந்திய திருச்சபை ஆராதனை

# சவால்

30

## சவாலை சந்திக்க ஆயத்தமாவோம்

பிலிப்பியர் 3:13 "சகோதரரே, அதைப் பிடித்துக் கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை, ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி" பவுலைப் போல் நாம் பழையதை மறந்து கர்த்தருடைய இராஜ்ஜியத்தை கட்டுவதற்கு கைகளை கோர்த்துக்கொள்வோம். வெள்ளை சிங்காசனத்திற்கு முன்பாக நிற்க தகுதியுள்ளவர்களாவோம், மற்றவர்களை தகுதிப்படுத்துவோம். இனி காலம் செல்லாது அவருடைய வருகை சமீபம்.







CALVARY CHURCH
BROWN ROAD
KOKUVIL: JAFFNA
SRI LANKA.
12th Jan 1984.

Dear Pastor/Brother/Sister,

We wish to inform you that we have formed a church and named it "CALVARY CHURCH" There are 37 members. At the first church meeting held on 8.1.1984. Presided over by Sis. Hanna Larsson. Bro. **G.S.A.Joseph** was elected Pastor and Bro.P.Rajaratnam was appointed as Elder and Bro. Augestin Joohim, Sis.Grace Joseph as Deacon and Deaconess, and Bro.L.J.Mathews as Evangelist, and assistant Pastor.

Now for the services new pople are coming from the avearage of 30,40. It has risen to 60,70. We have started a choir, Next month on the 12th 12 people are going to be baptised also on 16th of february we will be starting a youth fellowship meeting .From one outreach has risen to five.

The sunday school has growen into great extent with 10 teachers.We decided to have a teachers training course in february.

We have applied to join our church with the fellowship of free churches in Sri Lanka.

We covet your earnest prayers for us and the ministry.

May God Bless You
In christian love
..Hanna Larsson.....
Sis. Hanna Larsson
"..... Fear not,stand still, and see the salvation of the Lord...."

Exodus: 14;13

**CALVARY FULL GOSPEL CHURCH**
**No.89, Brown road, Kokuvil, Jaffna, Sri Lanka.**
**Tel&Fax: 009421 2222930, E.mail: calvaryfgc@gmail.com**

Noble Printers, Jaffna